[22nd September 1956

இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் முடிவதற்குள் ராஜ்யம் பூராவும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எத்தனை பயிற்சி பெற்ற ஊழியர்கள் தேவை என்பதை கணக்குப் போட்டுத்தான் இருக்கிறார்கள். இப்பொழுது வருஷத்திற்கு 840 பயிற்சி பெற்ற ஊழியர்கள் கிடைப்பதற்கான ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இதிலே தவறு ஒன்றுமில்லை.

Sri C. KANDASAMY : பயிற்சி பெற்ற ஊழியர்களில் சிலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. ஆகையால் எல்லா பயிற்சி பெற்ற ஊழியர்களுக்கும் வேலை கிடைக்கும் அளவுக்கு இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எனக்குத் தெரிந்த வரையில் தகுந்த பயிற்சி பெற்றவர்கள் யாரும் வேலைக்கு இடமில்லை என்ற காரணத்திற்காக நீக்கப்படவில்லை. அவர்களுடைய தகுதியைக் கவனித்துத்தான் அவர்கள் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பயிற்சி காலத்தில் அவர்களுக்கு 'ஸ்டைபெண்டு' கொடுக்கப்படுகிறது. 18 மாத பயிற்சி முடிந்தபின் அவர்கள் ஆங்காங்கு 'போஸ்டு' செய்யப் பட்டுத்தான் வருகிறார்கள்.

Sri K. ARANGANATHAN : தேசிய வளர்ச்சித் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு என்ஜினியர்கள் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். என்ஜினியர்கள் ஒத்துழைப்பு இல்லாமல் இருந்தால் வேலையில் அதிகமான முன்னேற்றம் காணமுடியவில்லை. அவர்களுக்கு தேசீய விஸ்தரிப்பு மனப்பான்மை இல்லை. ஆகையால் அவர்களுக்கு கிராமத்துக்கு உழைக்கவேண்டுமென்ற மனப்பான்மையை உண்டாக்கத் தகுந்த பயிற்சி அளிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த விஷயமும் கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது. ஆனால், கிராம அபிவிருத்தித் திட்ட வேலைக்கு வேண்டிய என்ஜினியர்களில் பற்றாக்குறை இருக்கிறது என்பதையும் நான் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* 166 *Q.*—Sri P. K. GOPALAKRISHNAN (on behalf of Sri K. P. Gopalan) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that there is an Advisory Committee for the Community Development Block areas in Payyanur and Madayi firkas in the Chirakkal taluk, North Malabar; and

(*b*) if so, the number of times the Committee met after the conversion of the National Extension Service Blocks in the above areas into Community Development Blocks?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Once.

Sri P. K. GOPALAKRISHNAN : May I know, what are the recommendations made by the Advisory Committee and how far the Government have implemented them?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I would like to have notice.